**கவனிக்க.-** *15.07.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III), பகுதி II மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1716 - 2011 ජූලි මස 22 වැනි සිකුරාදා - 2011.07.22

*1716 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 945 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 949 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 940 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்தொகுதி கல்லூரி (திருத்தம்) சட்டமூலம் 2011, யூலை 01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) கைத்தொழில் பிணக்குகள் (திருத்தம்) சட்டமூலம் 2011, யூலை 01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, யூலை மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, யூலை மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் வெளிநாட்டு மதுபான தவறணைகள் குத்தகைக்கு விற்றல்- 2012

1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதியிடப்பட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும், ஏற்புடையதான பிற நாட்டு நடைமுறைக்கு வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2012 ஆம் ஆண்டில் பிறநாட்டுக் குடிவகைகள் சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2011.08.16 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் காணப்படும் பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்,

(அ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழையும் கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். கேள்விப்பத்திரங்களையும் மற்றும் சொத்துக்களைப் பற்றிய சான்றிதழையும் முன்வைக்கும் கேள்விக்காரர்கள் மேற்படி பிறநாட்டு குடிவகைகள் தவறணைகளை விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைக்கொத்தில் அடங்கியுள்ள நியதிகளை முறையாக கடைப்பிடிக்க வேண்டும் என்பதை இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகிறது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும் போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை எண்ணில் மாத்திரம் அன்றி எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்க கையொப்பமும் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இங்கு வேண்டப்படும் தேவைகளுக்கு உட்படாத கேள்விப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

3. **முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரம்** -

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டுடனும் ;

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும் இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தவறணையின் இலக்கமும் பெயரும் குறித்த உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருக்க வேண்டும்.

5. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரரின் ''சிறப்புரிமைகளை வாங்கியவர்'' என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய பிறநாட்டுக் குடிவகை தவறணைகள் விற்பனைச் செய்யும் நிபந்தனைக்கொத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ''கொடுப்பனவுக்காக'' எனக் குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட ''பாதுகாப்பான காசோலை'' என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினாலோ அல்லது அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத தவறணை குத்தகைகள் 2011.10.12 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனைக்கு விடப்படும். அன்றைய தினம் கேள்விகள் முன் வைப்பதற்கான தேவைப்பாடுகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

7. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் கேட்டு அறிந்துக்கொள்ளலாம்.

பி. எம். நிமல் பாலசூரிய,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த.

உடபலாத்த பிரதேச செயலகம்,
கம்பளை,
2011, யூலை 05.

**அட்டவணை**

**கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவிற்குள் அங்கீகரிக்கப்பட்ட பிறநாட்டு குடிவகைகள் தவறணைகளின் பட்டியல் - 2012**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| 1. புஸ்ஸல்லாவ | உடபலாத்த | புஸ்ஸல்லாவ நகர எல்லைக்குள் | மு. ப. 11.00 மணியிலிருந்து பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணியிலிருந்து பி. ப. 8.00 மணி வரை | 2011.08.16 மு. ப. 10.30 மணிக்கு | 3,000 |

7-543/1

---

**உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளு தவறணைகளை குத்தகைக்கு வழங்கல் - 2012**

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதியிட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப் பகுதிக்கும், ஏற்புடையதான கள்ளு தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும், அக்காலப் பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2012 ஆம் ஆண்டில் கள்ளு சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2011.08.15 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் காணப்படும் பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்,

(அ) கேள்விப் பிணைப்பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டு குறித்த பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும்,

(ஆ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழையும் குறிப்பிட்ட கள்ளு தவறணை விற்கும் நிபந்தனைகளில் அடங்கியுள்ள நியதிகளை முறையாக கடைப்பிடிக்க வேண்டும் என்பதை கேள்விகளை சமர்ப்பிப்பவர்களுக்கு இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகிறது :-

(i) கேள்விப்பத்திரங்களை முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை எண்ணில் மாத்திரம் அன்றி எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும் ;

(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்க கையொப்பமும் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரம்.-

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டு ;

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழ்.

என்பன இணைக்கப்பட்டு கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறித்த உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவடைவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிட்டால் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருக்க வேண்டும்.

5. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரரின் "சிறப்புரிமைகளை வாங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்டு பின் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக

உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய கள்ளு தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனைக்கொத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியிலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினாலோ அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத தவறணை குத்தகைகள் 2011.10.10 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனைக்கு விடப்படும். அன்றைய தினம் கேள்விகள் முன் வைப்பதற்கான தேவைப்பாடுகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

7. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

பி. எம். நிமல் பாலசூரிய,
உடபலாத்த பிரதேச செயலாளர்.

உடபலாத்த பிரதேச செயலகம்,
கம்பளை,
2011, யூலை 05.

***அட்டவணை***

*2012 ஆம் ஆண்டிற்கு கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவிற்கு அங்கீகரிக்கப்பட்ட கள்ளு தவறணைகளின் பட்டியல்*

| தொடர் இலக்கமும் பிரிவு பெயரும் | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புத் தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1. வஹுகபிட்டிய | உடபலாத்த வஹுகபிட்டிய கிராமத்திற்குள் | மு. ப. 11.00 மணியிலிருந்து பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணியிலிருந்து பி. ப. 8.00 மணி வரை | 2011.08.15 மு. ப. 10.30 மணி வரை | 1,500 |
| 2. புஸ்ஸல்லாவ | உடபலாத்த புஸ்ஸல்லாவ நகரத்தின் எல்லைக்குள் | மு. ப. 11.00 மணியிலிருந்து பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணியிலிருந்து பி. ப. 8.00 மணி வரை | 2011.08.15 மு. ப. 10.30 மணி வரை | 3,000 |

7-543/2

---

## பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனை – 2012

1982 ஆம் ஆண்டின் ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பின்னைய காலப்பகுதிக்கும் கள்ளுத் தவறணை விற்பனைக்கான நிபந்தனைகளுக்கும் அக்காலப்பகுதியில் செல்லுபடியாகும் சகல மதுபான அனுமதிப்பத்திரங்களுக்கும் செல்லுபடியாகும் பொது மதுபான வரி நிபந்தனைகளுக்கிணங்க 2012 ஆம் ஆண்டுக்குள் மதுபான (கள்ளு) சில்லறை விற்பனைக்கான வரப்பிரசாதங்களை விலைக்கு வாங்குவதற்காக பேருவளை பிரதேச செயலாளராகிய என்னால் 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதி மு. ப. 12.30 மணிவரை கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரங்களும் நாட்டின் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் பெற்றுக்கொள்ளக்கூடியவாறான உரிய படிவத்தில் தயாரிக்கப்படுவதோடு –

(அ) கேள்விப்பத்திர வைப்பு பணமாக எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய கேள்விப்பத்திர பணம் வைப்புச்செய்து அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரசீதையும் (ரிசிட்) ;

(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணி பூமி ஆகிய நிரந்தர சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரதாரரின் வருமானம் பற்றிய சான்றிதழ்களையும் முன்வைக்க வேண்டும்.

கேள்விப்பத்திரமும் வருமானச் சான்றிதழும் முன்வைப்பது சம்பந்தமாக மேற்குறிக்கப்பட்ட மதுபான விற்பனைக்கான நிபந்தனைகள் முறையாக பேணப்பட வேண்டுமென்பதை கேள்விப்பத்திரதாரர்களுக்கு ஆணித்தரமாக வலியுறுத்தப்படுகிறது. கேள்விப்பத்திரம் பூர்த்தி செய்யப்படும்போது கேள்விப்பத்திரதாரர் கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்:-

(1) கேள்விப்பத்திரம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அவ்வாறு செய்யப்படும்போது அதிலே குறிக்கப்பட்டுள்ள பணத்தினை இலக்கத்தில் மட்டுமல்லாது எழுத்திலும் குறிக்கப்படல் வேண்டும்.
(2) பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களில் குறிக்கப்பட்ட சாட்சியாளரின் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.
(3) கோடிட்டு வெட்டப்பட்டுச் செய்யப்படும் சகல திருத்தங்களும் கேள்விப்பத்திரதாரரின் குறுகிய கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

மேற்குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு பூர்த்தி செய்யப்படாத கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரம் -

(அ) கேள்விப்பத்திர வைப்புப் பணம் வைப்புச் செய்யப்பட்டு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட ரசீதுடனும் ;
(ஆ) வருமானச் சான்றிதழோடும்

4. கடித உறையில் இட்டு முத்திரை பதிக்கப்பட வேண்டும் (சீல்) அக்கடித உறையின் வலது பக்க மேல் மூலையில் 'மதுபான விற்பனை நிலைய இலக்கமும் பெயரும்' குறிப்பிடப்பட்டு பேருவளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் கேள்விப்பத்திரம் கோரும் கடைசி நேரத்திற்கு முன்னதாகவே இடப்பட வேண்டும். அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

5. சரியாகப் பூர்த்தி செய்து அனுப்பிய கேள்விப்பத்திரதாரர் "தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர்" எனப் பிரகடனப் படுத்தப்பட்ட பின் அத்தினம் பி. ப. 2.30 மணிக்கு முன்பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் ஒரு தொகைப் பணம் முற்பணமாக பேருவளை பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்து கீழ்க்கூறும் மதுபானம் சேகரித்து விற்பனை செய்வது சம்பந்தமான நிபந்தனைகளுக்கு கைச்சாத்திடல் வேண்டும். இக்கட்டுப்பணமானது பணமாக அல்லது 'வங்கியில் செலுத்தப்பட்டதற்கஹ' எனக் குறிக்கப்பட்டு காசோலை மூலமாகவோ, மக்கள் வங்கி மூலமாகவோ அல்லது "பாதுகாப்புடைய காசோலை" என்ற பெயரில் செலுத்தப்பட்ட காசோலை மூலமாகவோ அல்லது அவ்வங்கியின் பெயரில் செலுத்தப்பட்ட காசோலையாகவோ இருத்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்ய முடியாத மதுபான விற்பனை நிலையம் 2011.10.03 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரம் இவ்வர்த்தமானிக்கு அமைவாக முன்வைக்கப்படல் வேண்டும்.

7. மேலதிக விபரங்கள் தேவைப்படின் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தம்மிக ராஜபக்ஷ,
பிரதேச செயலாளர்,
பேருவளை

பேருவளை பிரதேச செயலகம்,
2011, யூன் 29.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரிவு | கிராமம் | மதுபான நிலையம் திறக்கப்படும் நேரம் | மதுபான நிலையம் மூடப்படும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள் ளப்படும் இறுதித் திகதி | மீண்டும் விற்பனை செய்யும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பேருவளை பிரதேச சபைப் பிரிவு | அளுத்கம உபபிரிவு எல்லைக்குள் | மு.ப. 11.00 பி.ப. 5.00 | பி.ப. 2.00 இரவு 8.00 | 2,000 | 2011 ஓகத்து, 08 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை | 2011, ஒற்றோபர் 03 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை |

**முக்கிய குறிப்பு** : 2012 ஆம் ஆண்டிற்கு தற்போது மதுபான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடத்தை மீண்டும் பெற்றுத்தருவதாக உறுதி செய்யப்படமாட்டாது. புதிய இடங்களில் மதுபான விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்படுமாயின் அது சம்பந்தமாக பேருவளை பிரதேச செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

7-473

### இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை இல. 01 - கள்ளுத்தவறணை ஏலவிற்பனை - 2012

2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையுள்ள காலஎல்லைக்குள் இங்கு கீழ் அட்டவணையில் காணப்படும் பிரதேசத்தில் கள்ளு சில்லறைக்கு விற்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இங்கு கீழ்க்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும் :-

1. 1982.08.20 ஆந் திகதியுடைய இலக்கம் 207 வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை ஏல விற்பனை நிபந்தனைகளின் படியும்.

2. மதுவரிச்சட்ட நிபந்தனையில் காட்டப்பட்டுள்ள எல்லா மதுபான உத்தரவுப்பத்திரம் சம்பந்தமாக பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

   எல்லா விலை மனுக்களையும் பிரதேச செயலகத்தில் அல்லது இலங்கை வங்கியின் ''பிரதேச செயலகம் - பலாங்கொடை'' எனும் கணக்கில் பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினைப் பெற்று 1,500 ரூபாவினை செலுத்தி ''பலாங்கொடை இல. 01 கள்ளுத்தவறணை'' எனக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

3. இலங்கையின் எல்லா பிரதேச செயலகங்களிலும் அல்லது கொழும்பு மதுவரி திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட படிவத்தில் விலை மனு உரையையொட்டி (சீல் வைத்து) இடபக்க மேல் மூலையில் ''பலாங்கொடை இல. 01 கள்ளுத்தவறணைக்கான விலை மனு'' என்று தெளிவாக குறிப்பிட்டு விலை மனு திகதி முடிவடைய முன்பு பலாங்கொடை பிரதேச செயலகத்தின் விலைமனு பெட்டியில் அல்லது ''பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், பலாங்கொடை'' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

4. எல்லா விலை மனுக்காரர்களும் தமது சொந்தப் பெயரிலேயே விலை மனுவை சமர்ப்பித்தல் வேண்டும்.

5. ஒருவர் ஒரு கள்ளுத்தவறணைக்கு மேல் விலை மனு கோரமுடியாத அதே வேளை இருவர் சேர்ந்தும் கள்ளுத்தவறணைக்கு விலை மனு கோரமுடியாது.

6. விலை மனுக்காரரால் குறிப்பிடப்பட்ட விலை மனுவின் தொகை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடப்பட வேண்டும். விலைமனுக்காரர் எல்லா விலை மனுக்களிலும் கையொப்பம், திகதி இடப்பட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். எல்லா விலை மனுக்களிலும் சாட்சியாளர் இருவரால் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். நிபந்தனைகளுக்குட்படாத விலை மனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. விலை மனுக்கோரலில் வெற்றிபெற்ற மனுக்காரர் விலை மனுவை வாங்கியவராகக் கருதப்பட்டு பிரசுரிக்கப்பட்ட பின் பலாங்கொடை பிரதேச செயலகத்தின் நிபந்தனைகளில் கையொப்பமிட்டு பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் பணத்தினை செயலகத்தில் வைப்பிலிட்டு கள்ளுத் தவறணையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

8. 2011.09.06 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும். விலை மனு கோரப்பட்டு முடிவடைந்ததும் விலை மனு பெட்டி திறக்கப்படும். அச்சமயம் எல்லா விலை மனுதாரர்களும் குறிப்பிட்ட நேரத்தில் பலாங்கொடை பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

9. 2011.09.06 ஆந் திகதியன்று குறிப்பிட்ட நேரத்தில் இந்த விலை மனு நடைபெறாவிட்டால் அது மீண்டும் 2011.11.02 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

10. எந்தவொரு விபரமும் காட்டாது விலைமனுவை சொந்த விருப்பின் பேரில் நிராகரிக்கும் உரிமை பலாங்கொடை பிரதேச செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

11. 2012 ஆம் ஆண்டிற்கான தவறணை நடாத்தும் இடத்தில் இடத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதனைக் கூறமுடியாது. திறமையான விண்ணப்பக்காரரால் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தின் கட்டிடமொன்றை தேடிக்கொள்ள வேண்டும். அந்த கட்டிடத்திற்காக மதுபான ஆணையாளர் அவர்களின் அனுமதியைப் பெற வேண்டும். கட்டிடத்தைப் பெற்றுக்கொடுக்க ஆணையாளர் உடன்பாடில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும்.

12. மேலதிக விபரங்களை பலாங்கொடை பிரதேச செயலகத்தில் கேட்டறிந்து கொள்ளலாம்.

ஈ. எஸ். ஜீ. எதிரிசிங்க,
பிரதேச செயலாளர்,
பலாங்கொடை பிரதேச செயலகம்.

பிரதேச செயலகம்,
பலாங்கொடை,
2011, யூன் 30.

**அட்டவணை**

| கள்ளுத்தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | அமைவிடம் | கள்ளுத்தவறணை திறக்கப்பட வேண்டிய நேரம் | விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் காலமும் |
|---|---|---|---|---|
| இல. 01 பலாங்கொடை | பலாங்கொடை நகர எல்லை | பலாங்கொடை நகர சபைக்குட்பட்ட பிரதேசம் | மு. ப. 11.00 மணி முதல்- பி. ப. 2.00 மணி வரை பின் பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 2011.09.06 மு. ப. 10.30 |

7-471

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## கம்பனியின் பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கமைய, கீழ்க்குறிப்பிட்ட பொது வரையறுக்கப்பட்ட கம்பனி தனது பெயரினை 2011, யூலை 4 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு மாற்றியுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றோம் :-

கம்பனியின் முன்னைய பெயர் : சிலோன் புரூவரி பீஎல்சீ (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீகியூ 35
கம்பனியின் புதிய பெயர் : சிலோன் பெவரேஜ் ஹோல்டிங்ஸ் பீஎல்சீ
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள முகவரி : இல. 61, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 1

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கார்சன்ஸ் மனேஜ்மன்ற் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

2011, யூலை 22.

7-597

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு ஹெய்யந்துடுவ, 144/2 ஆம் இலக்க ஸ்தானத்தில் வசித்த இப்பொழுது கோனபீனுவல கங்காணங்கொட "சாந்தி மஹால்" இல் வதியும் கொடகந்த ஆராச்சிகே பிரியானி மனெல் நாணயக்கார ஆகிய என்னால் கம்பஹா பிரசித்த நொத்தாரிசும் சட்டத்தரணியுமான ஈ. ஏ. டீ. ஆனந்த வீரசேக்கர என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 119 மற்றும் 2003.12.17 ஆந் திகதிகொண்ட அற்றோணித் தத்துவம் மூலம் கொடகந்த ஆராச்சிகே டெரன்ஸ் கபில நாணயக்கார என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் என்னால் 2011, யூலை 7 ஆந் திகதி தொடக்கம் இரத்துச்செய்து செல்லுபடியற்றதாக்கப்படுகிறதெனவும் இதன் பிறகு கொடகந்த ஆராச்சிகே டெரன்ஸ் கபில நாணயக்கார என்பவரால் எனது சார்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கிறேன்.

கொடகந்த ஆராச்சிகே பிரியாணி மானெல் நாணயக்கார.

2011.07.07.

7-540

---

## அறிவித்தல்

ஸ்கை ஸ்போட் இன்டெர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
பீவீ 69190 மற்றும்
ஸ்கை ஸ்போட் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
பீவீ 3384

2011.05.20 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிக்கை மற்றும் 2011.05.20 ஆந் திகதிய "தினகரன்", "தினமின", "ஜலண்ட்" புதினப் பத்திரிகைகளில் வெளியான எமது அறிவித்தல் சம்பந்தமானது, 2011.05.20 மற்றும் 2011.06.01 ஆந் திகதிகளுக்கு இடையில் ஏற்பட்ட நிலைமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட வசதிகள் மற்றும் இணைப்புகள் அடைய முடியாதவை என இரண்டு கம்பனிகளதும் பணிப்பாளர்கள் தற்போது தீர்மானித்துள்ளனர்.

எனவே, ஸ்கை ஸ்போட் இன்டெர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் ஸ்கை ஸ்போட் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனம் என்பனவற்றை ஒன்றிணைப்புக்கான 2011.05.04 ஆந் திகதிய தீர்மானத்தை மீளப்பெறவும் தள்ளுபடி செய்யவும் இரத்துச் செய்யவும் பணிப்பாளர் சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே, (1) ஸ்கை ஸ்போட் இன்டெர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
(2) ஸ்கை ஸ்போட் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்

என்ற பெயர்களில் கம்பனிகள் தனியான தாபனங்களாக தொடர்ந்தும் இயங்கும் என்பதை தயவுசெய்து கவனிக்கவும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஸ்கை ஸ்போட் இன்டெர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
மற்றும்
ஸ்கை ஸ்போட் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்

2011.06.24.

7-598

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பாக இத்துடன் அறிவித்தல் வழங்குகின்றோம் :-

கம்பனியின் முன்னாள் பெயர் : வலிபல் வண் லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பிபி 3831
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 27-2, ஈஸ்ட் டவர், வேல்ட் ட்ரேட் சென்ட்ரர், எச்சலன் ஸ்குயர், கொழும்பு 1
கம்பனியின் புதிய பெயர் : வலிபல் வண் பீஎல்சீ

கம்பனி சார்பாக,

பி. டபிள்யூ. கோப்பரேட் செக்ரட்டேரியல் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

7-613

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் பிரகாரம் பென்குயின் கெசுவல்வெயார் (பிறைவேட்) லிமிட்டெட் பதிவிலக்கம் பீவீ 8642 மற்றும் பென்குயின் ஸ்போர்ட்ஸ்வெயார் (பிறைவேட்) லிமிட்டெட் பதிவிலக்கம் பீவீ 9558 எனும் கம்பனிகள் கையகப்படுத்தி ஒன்றிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பெயர் : ஸ்போர்ட்ஸ் வெயர் (பிறைவேட்) லிமிட்டெட்

திகதி : 2011.06.23

கோப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

7-588

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9 இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பெயர் : பார்க் டவர் புரபெர்டீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 78733
பதிவுத் திகதி : 2011.05.12
பதிவு முகவரி : இல. 216, த சேரம் பிளேஸ், கொழும்பு 10

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கோப்பரேட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

7-441

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் பின்வரும் கம்பனி 2011, யூன் 29 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது:-

கம்பனியின் பெயர் : பாம்வெயா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 79553
பதியப்பட்ட விலாசம் : இல. 9/5, தம்பையா அவெனியு, கொழும்பு 7

ஜேசீ அன்ட் கம்பனி,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 9/5, தம்பையா அவெனியு,
கொழும்பு 7.

7-447

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் பின்வரும் கம்பனி 2011, யூன் 21 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது:-

கம்பனியின் பெயர் : கொல்கேட் பாம்லிவ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 79504
பதியப்பட்ட விலாசம் : இல. 9/5, தம்பையா அவெனியு, கொழும்பு 7

ஜேசீ அன்ட் கம்பனி,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 9/5, தம்பையா அவெனியு,
கொழும்பு 7.

7-448

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பெயர்* : ஐடிஎஸ்ஓ பவ்ண்டேஷன்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : ஜீஏ 2563
*பதிவுத் திகதி* : 2011.06.27
*பதிவு முகவரி* : இல. 1048, கேகேஎஸ் வீதி, யாழ்ப்பாணம்

கன்சல்டன்ட்ஸ் அன்ட் கோர்ப்பரேட் செக்ரடரீஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

தொலைபேசி இல. 2689618.

7-470/1

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பெயர்* : அக்குவாசன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவு இலக்கமும் பதிவுத் திகதியும்* : பீவீ 79571 ; 2011.06.22
*பதிவு முகவரி* : இல. 10, மைல்கல் அவெனியு, கொழும்பு 3

கன்சல்டன்ட்ஸ் அன்ட் கோர்ப்பரேட் செக்ரடரீஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

தொலைபேசி இல. 2689618.

6-470/2

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பெயர்* : சிதிஜா லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 76412
*பதிவுத் திகதி* : 2011.01.05
*பதிவு முகவரி* : இல. 310, கனன்வில, ஹொரண

*கம்பனியின் பெயர்* : நாலக இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 76561
*பதிவுத் திகதி* : 2011.01.13
*பதிவு முகவரி* : இல. 2, விக்டோரியா எஸ்ட்டேட், முனகம்புர, முனகம, ஹொரண

*கம்பனியின் பெயர்* : ஸிகோ மொபைல் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 77910
*பதிவுத் திகதி* : 2011.03.22
*பதிவு முகவரி* : இல. 150, ரத்னபுர, ஹொரண

*கம்பனியின் பெயர்* : சென்பா என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 78394
*பதிவுத் திகதி* : 2011.04.20
*பதிவு முகவரி* : இல. 310, கனன்வில, ஹொரண

பிரசன்ஜிவி பட்டிஆரச்சி,
மேலேயுள்ள கம்பனிகளின்
செயலாளர்.

7-482

---

**பெயர் மாற்றும் பொது அறிவித்தல்**

